කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

அறிக்கை இல : 02 TCA/26/02/17/01

நிறம் : ஆம்பர்

**இலங்கைக்கு தென்கிழக்காக தெற்கு வங்காள விரிகுடாவின் மத்திய பகுதிகளுக்கு மேலாக ஒரு குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்பான ஆலோசனை:**

இயற்கை அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கை நிலையத்தினால்,
2026 பெப்ரவரி 17ஆம் திகதி பிற்பகல் 03.00 மணியில் வெளியிடப்பட்டது.

**பல நாள் மீன்பிடிப் படகு மீனவர்களுக்கும் கடலில் பயணம் செய்வோருக்கும்: தயவு செய்து அவதானமாக இருக்கவும்!**

**இலங்கைக்கு தென்கிழக்காக தெற்கு வங்காள விரிகுடாவின் மத்திய பகுதிகளுக்கு மேலாக உருவாகிய குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளது. இத் தொகுதியின் தாக்கம் காரணமாக, இந்தக் கடல் பகுதியில் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடுவதுடன், மணிக்கு (50-60) கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும், அத்துடன் இக் கடற்பரப்புகள் கொந்தளிப்பாகவோ அல்லது மிகவும் கொந்தளிப்பாகவோ இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

வளிமண்டலவியல் திணைக்களம், இத் தொகுதியின் நடத்தையை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிக்கைகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
**Department of Meteorology**

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk




*வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் குறைந்த அழுத்தப் பிரதேசத்தின் அமைவிடம்*

இன்றைய தரவுகளின் அடிப்படையில், அடுத்த 168 மணித்தியாலங்களில் சூறாவளியாக வலுவடையும் (தாழமுக்கம் உருவாகும் நிலை) நிலைக்கான நிகழ்தகவு

| 24 மணி நேரம் | 24-48 மணி நேரம் | 48-72 மணி நேரம் | 72-96 மணி நேரம் | 96-120 மணி நேரம் | 120-144 மணி நேரம் | 144-168 மணி நேரம் |
|---|---|---|---|---|---|---|
| இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

அடுத்த அறிக்கை 2026 பெப்ரவரி 18ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிக்கு வெளியிடப்படும்.

கடமை வளிமண்டலவியலாளர்
வளிமண்டலவியல் திணைக்களம்

0112 686 686 (24 மணி நேர அவசர அழைப்பு சேவை)